மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து பதில் வந்துவிட்டது. முடிந்துவிட்டது, உட்காருங்கள்.

(ஆ) விவசாயிகளுக்கு வழங்கும் இலவச மின் மோட்டார்களுக்கு மின் அளவிட்டுக் கருவி பொருத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் இலவச மின் மோட்டார்களுக்கு மின் அளவீட்டுக் கருவி பொருத்தப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. கு. பாண்டுரங்கன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. தி. வேல்முருகன், திரு. ஜி.கே. மணி, திரு. பெ. கண்ணன், திரு. வை. காவேரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திருமதி ஜி. லதா, திருமதி ரா. லீமா ரோஸ், திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜாண் ஜோசப், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், திரு. தி. இராமசாமி, மதிமுக. சார்பாக டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. து. ரவிக்குமார் ஆகியோர் விதி 56, 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்பு கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். (குறுக்கீடுகள்)

யார் பேசுகிறார்கள்? (குறுக்கீடுகள்) தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் இலவச மின் மோட்டார்களுக்கு மின் அளவீட்டுக் கருவி பொருத்தப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து. (குறுக்கீடுகள்) இல்லையா? (குறுக்கீடுகள்) பொறுங்கள், ஒவ்வொரு கட்சியாகக் கூப்பிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யார் பேசுகிறார்கள்? சரி, அஇஅதிமுக. சார்பாக யாரும் பேசவில்லை என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்) யார் பேசுகிறார்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2010 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் இலவச மின் மோட்டார்களுக்கு மின் அளவீட்டுக் கருவி பொருத்தப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து மறுபடியும் எடுக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்கள், எந்தக் காரணத்தைக் கொண்டும் இலவச மின்சாரம் எடுக்கப்பட மாட்டாது என்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குமேல் யாரும் ஒரு விளக்கம் தர முடியாது. எனவே, இந்த subject-ஐ விட்டுவிட்டு வேறு subject-க்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் இங்கே முதலில் எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அதே பதில் இதற்கும் பொருந்தும் என்பதால், இரண்டு பிரச்சினைகளுக்கும் ஒரே பதில் என்று முடிவு எடுக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) திரு. கோ.க. மணி, இரண்டு பிரச்சினைகளுக்கும் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) மற்ற கோரிக்கைகள் என்னென்ன வைத்தீர்களோ, அவற்றிற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரின் தொழிற்சாலை மற்றும் அலுவலகத்தில் மத்திய கலால் துறையினர் வரி ஏய்ப்பு ஆய்வு செய்தது குறித்து. . . (குறுக்கீடு)

(ஆ) கரும்பு, பால் கொள்முதல் விலையை உயர்த்தப் போராடிய விவசாயிகள் கைது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விலை குறித்து விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள், அதனால் கைது செய்யப்பட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் இங்கே சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக்

கொண்டு வந்தார்கள். அது குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு அனுமதி வழங்கினால் நான் அதற்குப் பதில் தருகிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறிவிப்பு கொடுத்த பிரச்சினைக்குத்தான் வேளாண்மைத் துறை அமைச்சர் பதில் சொல்ல வருகிறார், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தவர்களுடைய கருத்துகளைக் கேட்டு, அதன் பிறகு என்னுடைய பதிலைத் தருவதற்கு தாங்கள் அனுமதித்தால், அதற்குப் பிறகு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் அதற்குத்தானே அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். *(குறுக்கீடு)* சரி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய ஒட்டுமொத்த பிரச்சினைகள் குறித்து, ஒட்டுமொத்தமாக கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, மின்சார மோட்டார்களை மாற்றுவது குறித்து; இலவச மின்சாரம் நிறுத்தப்படுமா என்று மக்கள் மத்தியிலே இருக்கின்ற அச்சம் குறித்து; கரும்புக்கு உரிய விலை நிர்ணயம் செய்வது குறித்து; பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட வேண்டும் என ஒட்டுமொத்தமாக கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் இரண்டு கட்சிகளை மட்டும் பேச அழைத்தீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் பேசி முடித்திருக்கிறது. *(குறுக்கீடு)* காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. விடியல் எஸ். சேகர் பேசி முடிப்பதற்குள் நிறுத்தப்பட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் உள்ளோட்டமாக

2010 நவம்பர் 11] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

இருக்கின்ற முக்கியமான கோணத்திற்கு மட்டும் பதில் அளித்தார்கள். எந்தக் காலத்திலும் இலவச மின்சாரத்தை இரத்து செய்யமாட்டோம் என்ற உறுதியினை சொல்லியிருக்கிறார்கள். இதிலுள்ள மற்ற செய்திகள் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அதற்கு முன்னால் அதுசம்பந்தப்பட்ட கருத்துகளைப் பதிவு செய்ய இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் மற்ற கட்சிகளுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம். நீங்கள் கொடுத்த அறிவிப்புகளில் என்ன கோரிக்கை வைத்திருக்கிறீர்களோ, அதற்குத்தான் அமைச்சர் பதில் சொல்ல வருகிறார். நீங்கள் அதை விடுத்து வேறு என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் மானியக் கோரிக்கையின்மீது நடைபெற வேண்டிய விவாதத்தில் பங்குகொள்ள வேண்டியவர்கள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தால், இன்றையதினம் கேள்வி நேரம் முடிந்தவுடன், விவாதம் எடுத்துக்கொள்ளப்படும் என்று நேற்றையதினம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. என்ன காரணத்தாலோ, இடையில் தரப்பட்ட இந்தத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, விவாதம் நீண்டநேரம் நடைபெற்றிருக்கிறது. விவாதம் செய்ய வேண்டிய கடமையுள்ளவர்களும், ஆர்வம் உள்ளவர்களும், எதிர்க்கட்சியிலே பலபேர் இருக்கிறார்கள். அவர்கள் இந்த விவாதத்திலே கலந்துகொள்வதற்கான நேரம் குறைந்து போகும் என்பதை உள்ளத்திலே வைத்துக்கொண்டு செயல்பட வேண்டும். இப்பொழுது எழுப்ப வேண்டிய பிரச்சினைகளில் எந்தக் கருத்தைச் சொல்கிறார்களோ அதைச் சுருக்கமாகக் கருத்தளவிலே சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விடியல் எஸ். சேகர், உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு)

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கிடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. அன்பழகன் எதைப் பற்றிப் பேசினார்? அந்தப் பிரச்சினையைப் பற்றித்தானே பேசினார்.

திரு. விடியல் எஸ். சேகர்: அ.இ.அ.தி.மு.க.வினர் அந்தப் பிரச்சினையைப் பற்றி பேசியாகிவிட்டது. திரு. கே.பி. அன்பழகன் பேசிவிட்டார். (குறுக்கீடுகள்)

(ஆ) விவசாயிகளுக்கு வழங்கும் இலவச மின் மோட்டார்களுக்கு மின் அளவிட்டுக் கருவி பொருத்துதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் விதி 56-ன்கீழ் இரண்டு பொருள்கள் குறித்து தங்களிடம் ஏற்கெனவே மனு செய்திருக்கிறோம். விண்ணப்பம் தரப்பட்டிருக்கிறது. அதில் முதல் மனு நேற்றையதினம் விவசாயிகளைக் கைது செய்தது பற்றியது, அதற்கு கே.பி. அன்பழகன் பேசி விட்டார். இரண்டாவது, மின்சார மோட்டாரை மாற்றிக் கொடுப்பது பற்றியும், புதிய மின் மோட்டார்களைக் கொடுப்பது பற்றியும், மின் கட்டணம், மின் மீட்டர் பொருத்துவது பற்றியும் அறிவிப்பு கொடுத்திருக்கிறோம். அதை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள். அதை எடுத்துவிட்டு அதற்கு முன்னாலே மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு புதிய விளக்கம் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் தந்தார்கள்.

அந்தக் கடிதத்தில் புதிய பம்ப் செட்டுகளை மாற்றுவது குறித்தும் மற்றும் சில விஷயங்களும் இருக்கின்றன. ஆகவே, அது குறித்துதான் நாங்கள் விவாதிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு முதலைமைச்சர் அவர்கள் இலவச மின்சாரத்தைப் பற்றி இங்கே அறிவிப்பு செய்தார்கள், அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால், புதிய மின் மீட்டரைப் பொருத்தப் போகிறீர்களே, எதற்காகப் பொருத்தப் போகிறீர்கள் என்ற ஐயப்பாடு விவசாயிகள் மத்தியிலே பரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது. அதற்குத்தான் நாங்கள் சில விளக்கங்களைக் கேட்க விரும்புகிறோம். நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களிலே யார் பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) உங்களுக்குள்ளேயே குழப்பம், யார் பேசுவது என்று உங்களுக்குள்ளேயே தெரியவில்லை. திரு. ஓ.பி.எஸ்., யார் பேசப் போகிறார்கள்? இனிமேல்தான் ஆள் பிடிக்க வேண்டுமோ? (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதிலைக் குறிப்பிட்டுவிட்டு எதற்காக புதிய மோட்டாரை நீங்கள் இப்பொழுது பொருத்தப் போகிறீர்கள், புதிய மின் மீட்டர் பொருத்துவதற்காகத்தானே என்று ஒரு கேள்வி கேட்டார். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது மட்டுமல்ல, இரண்டு தினங்களுக்கு முன்னாலே அரசாங்கத்தின் சார்பிலே எல்லா பத்திரிகைகளிலும் விளக்கமாக அறிவிப்பும் வந்திருக்கின்றது. புதிய மோட்டார் பொருத்துவது என்பது Line Loss-ஐக் குறைப்பதற்காக. இரண்டாவது, எந்தக் காரணத்தைக் கொண்டும் மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது என்பது மட்டுமல்ல, மின் மீட்டர்களும் பொருத்தப்பட மாட்டாது என்பது இந்த அரசாங்கத்தின் சார்பிலே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கோரிக்கைகளுக்கு பதில் சொல்லிய பிறகும் நீங்கள் பேசித்தான் ஆகவேண்டுமென்றால் என்ன அர்த்தம்? முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லியாகிவிட்டது, மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியாகிவிட்டது, அதற்குப் பிறகும் நீங்கள் பேசித்தான் ஆகவேண்டுமென்றால் என்ன அர்த்தம்? உங்கள் உறுப்பினர் திரு. அன்பழகனும் பேசியாகிவிட்டது. நேரத்தின் அருமை கருதி கொஞ்சம் எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் மற்ற உறுப்பினர்களெல்லாம் பேச முடியும். அவை நடவடிக்கைகளிலே நீங்கள் மிகவும் இடைஞ்சல் பண்ணாதீர்கள்.